தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 258/ந/2023
நாள் 27.10.2023

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 16.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.08.2023 அன்று பெறப்பட்டு 258/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, திருமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட முன்சீப் கோர்ட் ரோடு (போஸ்ட் ஆபீஸ் அருகில்)–ல் உள்ள வேலு – மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்ட மருத்துவமனை கட்டடமாகும். இம்மருத்துவமனைக்கு நான்குபுறமும் சட்டவிதிகளின்படி 13 அடி இடம் விடாமலும், சாலையை ஆக்கிரமிப்பு செய்து முன்பகுதியில் படிக்கட்டும் கட்டப்பட்டுள்ளது. மேலும் "வேலு" மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கு ஒரு அடி கூட இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக வேலு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்து கடுமையான பாதிப்பு ஏற்படுகிறது.

மேற்படி மருத்துவமனை கட்டடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கான கட்டடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் (Directorate of town and country Planning) ஒப்புதல் பெறவில்லை.

எனவே, வேலு மருத்துவமனை சட்டத்திற்கு புறம்பாக நான்குபுறமும் (Set back) இடைவெளிவிடாமலும், வாகனம் நிறுத்துவதற்கு (Parking space) இடம் விடாமலும் கட்டப்பட்டுள்ளதால், உள்நோயாளிகளை பார்க்க வருபவர் மற்றும் புறநோயளிகளாக சிகிச்சை பெற வரும் நபர்களுடைய இரண்டு சக்கர வாகனம் மற்றும் மூன்று, நான்கு சக்கர வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதால் அவ்வழியாக செல்லும் பள்ளி மாணவ, மாணவியர், கல்லூரி வாகனம், ஆம்புலன்ஸ், குடிநீர் வாகனம் மற்றும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இம்மருத்துவ மனையை கடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட வேலு மருத்துவமனை – தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய்த் துறையிடம் உரிமம் ஏதும் பெறாமல் இயங்கி வருவதால் வேலு மருத்துவமனையை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57–உடன் படிக்கபட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work notice / Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடும் Lock and seal and demolition அறிவிப்பினை வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தாவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திருமங்கலம் நகராட்சி வார்டு எண்.13, முன்சிப் கோர்ட்ரோடு கதவு எண். 97, 99 மற்றும் 101–ல் அமைந்துள்ள வேலு மருத்துவமனை, திரு.சரவணன் என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி கட்டடத்திற்கு கட்டட அனுமதி வழங்கி 16 ஆண்டுகளுக்கு மேலான காரணத்தினால் கட்டட அனுமதி வழங்கப்பட்ட தகவல்கள் எடுக்க இயலாத காரணத்தால் நகராட்சி வருவாய் ஆய்வாளருக்கு ந.க.எண்.1712/2023/எப்1, நாள் 21.09.2023–ல் குறிப்பாணை மனுதாரரிடம் நேரடியாக சென்று கட்டட அனுமதி நகல் பெற்றுவர மற்றும் கட்டடத்தின் அளவுகள் குறித்த விபரங்கள் வழங்க உத்தரவிடப்பட்டது. வருவாய் ஆய்வாளர் 27.09.2023 ஆம் தேதிய ஆய்வுக் குறிப்பின்படி கீழ்க்கண்ட விபரங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரரிடம் நேரில் சென்று வரைபட அனுமதி நகல் கோரியபோது கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் உத்தேசமாக 2006 ஆம் ஆண்டு உரிய வரைபட அனுமதி பெறப்பட்டு கட்டடம் கட்டப்பட்டதாக மருத்துவமனையின் உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி கட்டடத்தின் கீழ்தளம் அளவு 2225 சதுரடிக்கு (கதவு எண்.97) வரிவிதிப்பு எண்.117/013/900615–ன்படி ஓர் ஆண்டுக்கான வரிவிதிப்பு தொகை ரூ.22328/– தரைதளம் அளவு 1825 சதுரடிக்கு (கதவு எண்.99) வரிவிதிப்பு எண். 117/013/900616–ன்படி ஓர் ஆண்டுக்கான வரிவிதிப்பு தொகை ரூ.16,568/– மற்றும் முதல் தளம் அளவு 1618 சதுரடிக்கு (கதவு எண்.101) வரிவிதிப்பு எண்.117/013/900617–ன்படி ஓர் ஆண்டுக்கான வரிவிதிப்பு தொகை

ரூ.12,216/– விதிக்கப்பட்டு வணிக பயன்பாட்டின்படி 2023–24 ஆம் ஆண்டு வரை சொத்துவரி வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டடத்திற்கு மின் இணைப்பு எண்.05131005652 வணிக பயன்பாட்டில் உள்ளது. மேற்படி கட்டடத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை. புதை வடிகால் இணைப்பு டெபாசிட் தொகையும் பாதாள சாக்கடை இணைப்பு நடப்பு நிதியாண்டு வரை வசூல் செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை டாக்டர்.திரு.வி.சரவணன் என்பவர் பெயரில் தொழில்வரி விதிப்பு எண்.117/013/900721–ன்படி 2023–24 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு வரை வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வணிக பயன்பாட்டு கட்டடமானது பழைய நகரமைப்பு பகுதியில் அமைந்துள்ள ஒரு கட்டடமாகும். மேற்படி இடத்திற்கான கட்டட அனுமதி 16 ஆண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்டதாலும் சாலையின் அகலம் 15 அடி மட்டுமே உள்ளதாலும் போக்குவரத்து வாகனங்கள் செல்ல வழிவகை இல்லாததாலும் வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டட அனுமதி கோரப்படவில்லை, தற்போது வாகனங்கள் தனியாக நிறுத்துவதற்கான வழிவகை ஏதும் இல்லை மேலும் மருத்துவமனை கட்டடம் ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்து கட்டப்படவில்லை என்பதற்கான நகரளவர் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கட்டடங்கள் தற்போது ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படாமல் இருக்க திருமங்கலம் நகராட்சி அலுவலக நகரமைப்பு அலுவலர், வருவாய் ஆய்வாளர், வருவாய் உதவியாளர் மற்றும் நகரளவர் மூலம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சொத்துவரி வணிக பயன்பாட்டில் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாவண்ணம் உரிய அளவுகளின்படி வரிவிதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலினை ஏற்று மேற்படி விசாரணையை முற்றாக்கம் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையரும் 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி என்பவர் 06.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''மதுரை மாவட்டம் திருமங்கலம் நகராட்சி முன்சீப் கோர்ட் சாலையில் உள்ள வேலு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு நான்கு புறமும் விதிகளின்படி இடம் விடாமலும், மருத்துவமனையின் படிக்கட்டுகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்தும் கட்டப்பட்டுள்ளது. அம்மருத்துவமனையில் வாகனங்களை நிறுத்துவதற்கான போதுமான இடவசதி இல்லை என்பதால், அம்மருத்துவமனைக்கு வரும் புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் அம்மருத்துவமனைக்கு வெளியே தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு செல்கின்றனர். இதனால் அங்கு மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, மருத்துவமனை வழியே செல்லும் பொது மக்களும், வாகன ஓட்டிகளும் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

எனவே, விதிகளை மீறி செயல்படும் மேற்கண்ட வேலு மருத்துவமனையின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதுபோன்ற விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மீது அமலாக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையால்

வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 7 நாள் 10.1.2023 –ன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் 06.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக திருமங்கலம் நகராட்சியில் நகரமைப்பு அலுவலராகப் பணிபுரியும் திரு. வே.ஜின்னா என்பவர் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''மதுரை மாநகராட்சி திருமங்கலம் நகராட்சி வார்டு எண் 13 முன்சிப் கோர்ட் ரோடு கதவு எண் 97, 99 மற்றும் 101–ல் வேலு மருத்துவமனை என்கின்ற மருத்துவமனை இயங்கி வருகிறது. மேற்கண்ட கட்டத்திற்கான வரைபட அனுமதி 2005–ம் ஆண்டு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவமனையை நேரடியாக ஆய்வு செய்ததில், அங்கு கட்டட அனுமதிக்கு மாறாக மேற்கண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளதை அறிய முடிந்தது. மேலும் மேற்கண்ட மருத்துவமனைக்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு மருத்துவமனையால் வழிவகை செய்யப்படவில்லை ,

மேலும், திருமங்கலம் நகராட்சி அலுவலகம் பழைய இடத்திலிருந்து புது இடத்திற்கு மாற்றப்பட்டதால், மேற்கண்ட மருத்துவமனைக்கு அளிக்கப்பட்ட வரைபடநகல் நகராட்சியில் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மேற்கண்ட மருத்துவமனையின் வரைபட நகல் கட்டட உரிமையாளரிடம் கோரப்பட்டுள்ளது. கட்டட உரிமையாளரிடமிருந்து மேற்கண்ட கட்டட வரைபடம் பெறப்படவில்லையெனில், Town and Country Planning Act-படியும், வீட்டுவசதித் துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 7, நாள் 10.1.2023ன்படியும் Lock and Seal தாக்கீது, De-occupation தாக்கீது மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக திருமங்கலம் நகராட்சி ஆணையரின் (பொறுப்பு) 5.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் தனது 16.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட திருமங்கலம் முன்சிப் கோர்ட் ரோடு, தபால் நிலையம் அருகில் இயங்கி வரும் வேலு மருத்துவமனையானது, தெருவினை ஆக்கிரமிப்பு செய்தும் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் இன்றியும் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் வேலு மருத்துவமனை கட்டடத்திற்கான கட்டட அனுமதி மற்றும் வரைபட அனுமதி சுமார் 21 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலும், திருமங்கலம் நகராட்சி அலுவலக இடமாற்றம் செய்ததன் காரணமாகவும் மேற்காணும் புகாருக்குள்ளான வேலு மருத்துவமனை குறித்தான கட்டட அனுமதிக்கான ஆவணங்கள் உடனடியாக நகராட்சி அலுவலகத்தில் கண்டறிய முடியாத நிலையில், வருவாய்த்துறை மூலமாக நகரளவை நிலப்பதிவேட்டில் (Town survey Land Register) பதியப்பட்டுள்ள பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு, வருவாய் ஆய்வாளர் மேற்படி வேலு மருத்துவமனையை நேரடியாக ஆய்வு செய்து, கட்டட அளவீடு செய்யப்பட்டதில் இம்மருத்துவமனை நகரபுல எண்.65–ல் 0.02.130 ஏர்ஸ் பரப்பளவில் வேலு என்பவரின் மகன் சரவணன் என்கிற பெயரில் உள்ளது என்றும், கட்டடத்தை அளவீடு செய்ததில் எவ்வித கட்டட ஆக்கிரமிப்பும் இல்லை என நகரசார் ஆய்வாளர் சான்றளித்துள்ளதன் மூலம் தெரிய வருகிறது.

நகர்சார் ஆய்வாளர் தனது அறிக்கையில் எவ்வித கட்டட ஆக்கிரமிப்பும் இல்லை என தெரிவிக்கும் நிலையில், திருமங்கலம் நகராட்சி நகரமைப்பு அலுவலர் தனது வாக்குமூலத்தில் நேரடி ஆய்வு மேற்கொண்டதில் கட்டட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது தெரிய வருகிறது என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நகராட்சி நகரமைப்பு அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, கட்டட உரிமையாளரிடமிருந்து கட்டட அனுமதி, வரைபட அனுமதி ஆகிய ஆவணங்களை பெற்று, அதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதம் செய்திடுமாறும், அவ்வாறு இல்லையெனில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.07 நாள் 10.01.2023–ல் வெளியிடப்பட்டுள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், பிரிவு 56.57 மற்றும் 80 (A)ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு திருமங்கலம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், நகராட்சியால் வழங்கப்படும் கட்டடங்கள் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த அனுமதி ஆணைகள் போன்றவற்றை சரிவர பாதுகாக்காமல் அலுவலக இடமாற்றம் காரணமாக கண்டறிய இயலவில்லை என தெரிவித்து திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் பணியில் மெத்தனமாக நடந்து கொண்டு பொறுப்பற்ற முறையில் செயலாற்றும் நகராட்சி ஆணையாளரின் நடவடிக்கையை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

புகாருக்குள்ளான வேலு மருத்துவமனை கட்டட அனுமதி தொடர்பான மூல ஆவணங்கள் நகராட்சியில் கிடைக்கப்பெறவில்லையெனில், ஆவணங்கள் காணமல் போனதற்கு காரணமான சம்பந்தப்பட்ட திருமங்கலம் நகராட்சி ஆணையர் / அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு

நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The DMA is directed to ensure that the Municipal Commissioner of Tirumangalam Municipality complies with the orders of the Forum without dodging by deliberate lame excuse of "missing" files pertaining to this petition. Appropriate disciplinary action should be launched against the delinquents concerned for their collusion, connivance, complicity and sickening compatibility with the building violator.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
பிளாட் எண். 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2) ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
1/11/23
30/10/23